| | | | |
|---|---|---|---|
| 15.11.2021 | அசல் வழக்கு எண்.126/2019 | வா.சா.2 | திரு.கார்த்திக்<br>த/பெ. கிருஷ்ணசாமி |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)

வாதி ஈஸ்வரன் என்னுடைய உறவினர் என்றால் தூரத்து சொந்தம் ஆவார். நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். இதற்கு முன்பு நான் காசோலை எதாவது எழுதியிருக்கிறேனா என்றால் எனக்கு எழுதி பழக்கம் இருக்கிறது,. நான் சொல்வது பொய் என்றாலும் எனக்கு பிராமிசரி நோட்டு எழுத தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு எழுத தெரியும். வழக்கறிஞர் அலுவலகத்தில் எழுதி பிராமிசரி நோட்டில் கையெழுத்து போட்டு விட்டு தற்பொழுது நான் எழுதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. நான் பி ஜே பியி ல் அரசியல் கட்சியில் இளைஞர் அணி தலைவராக இருக்கிறேன். பிராமிசரி நோட்டில் என்ன என்ன விபரங்கள் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால்சரியல்ல. எனக்கு தெரியும். எனக்கு பிராமிசரி நோட்டு எழுதும் அளவிற்கு பழக்கம் கிடையாது என்றாலும், ஈஸ்வரன் எனது உறவினர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு பிராமிசரி நோட்டு எழுத தெரியும். நான், வாதி ஈஸ்வரன், மற்றும் பிரபாகரன் ஆகியோர் கட்டிட வேலை செய்கிறோம் என்றால் சரிதான். நான் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்கிறேன். பிரபாகரன் எனக்குசொந்தக்காரர் என்றால் சரிதான். அவர் எனக்கு தூரத்து சொந்தம். வா தி ஈஸ்வரன் இன்று என்னுடன்நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால்இல்லை. பிரபாகரன் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்றால் இல்லை. வாதி ஈஸ்வரனும் , பிரபாகரனும் உறவினர்கள் என்றால் சரிதான். பிரபாகரன் பிரதிவாதி சங்கீதாவிற்கு வீடு கட்டி கொடுத்துள்ள விபரம்எனக்கு தெரியும். அந்த வீடு கட்டிய து சம்பந்தமாக பிரபாகரனுக்கும் சங்கீதாவிற்கும் இடையே பிரச்சினை ஏற்பட்ட விசயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 14.01.2019 அன்று பிரதிவாதி சங்கீதா பிரபாகரனுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி ஈஸ்வரனின் வழக்கறிஞர் தான் பிரபாகரனுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார் என்றால அது பற்றி எனக்கு தெரியாது.

வாதி ஈஸ்வரன், பிரபாகரன் மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து பிராமிசரி நோட்டைபொய்யாக தயாரித்து உள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு போலியாக தயாரித்த பிராமிசரி நோட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டஇந்த பொய் வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் தவறு. நான் சொன்னது போல் பிரதிவாதி எந்த ஒரு கையெழுத்தையும் அந்த புரோ நோட்டில் போடவில்லை என்றால் சரியல்ல. போட்டிருக்கிறார். நானும் வாதியும் , பிரபாகரனும் சேர்ந்து பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக போட்டு கடனுறுதி சீட்டை மோசடியாக தயாரித்து மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் தவறு. நான் சொல்வது போல் பிரதிவாதி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கடன் வாங்கவில்லை என்றாலும், எந்த ஒரு கடனுறுதி சீட்டிற்கும் கையெழுத்து போடவில்லை என்றாலும் கடனுறுதி சீட்டே பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. கையெழுத்து போட்டார். புரோ நோட்டில் உள்ள தேதி , சங்கதிகள் எதுவும் உண்மை அல்ல என்றாலும், அவை பொய்யான சங்கதிகள் என்றாலும் சரியல்ல. நானும் என் தகப்பனாரும் பிரதிவாதி கடன் வாங்கி கொண்டு கையெழுத்து போட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 20.05.2018 தேதியில் நானும் என் தகப்பனாரும் வாதியின் வீட்டிற்கு காலையில் போனதாக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் பிரதிவாதி காலையில் வாதியிடம் பணம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கேட்டிருந்தார். பிரதிவாதியே பிராமிசரி நோட்டு மற்றும் ஸ்டாம்ப்பை கொண்டு வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னாடியும் என் தகப்பனார் முன்னாடியும் வாதி ரூ. 7,50,000/- கொடுத்ததாக சொல்வதே பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. அந்த பணத்தை பிரதிவாதி வாங்கி கொண்டு பிராமிரி நோட்டை வாதியிடம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இருந்ததால் தான் பிராமிசரி நோட்டை என்னை வைத்து எழுத சொன்னார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அது போன்ற சம்பவம் நடைபெறவே இல்லை என்றாலும் சரியல்ல. நான் அந்த இடத்தில் இருந்ததாகவும் பிரதிவாதி தன்னுடைய முகவரியை சொல்லி எழுத சொன்னதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் ஸ்டாம்ப் ஒட்டிய பிறகு பிரதிவாதி அதில் கையெழுத்து போட்டதாகவும் அப்பொழுது நானும் என் தகப்பனாரும் அங்கே

இருந்ததாகவும் சாட்சி கையெழுத்து என் தகப்பனார் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிய ல்ல. பிராமிசரி நோட்டில் எழுதியது என்ற இடத்தில் அப்பொழுது நான் கையெழுத்து போட்டதாகவும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிய ல்ல. அதன் பிறகு பிராமிசரி நோட்டை வாதி பிரதிவாதியிடம் கொடுத்து விட்டு பணத்தை வாங்கி கொண்டு போனதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அந்த பணத்திற்கு வட்டியோ அசலோ தரவே இல்லை என நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், பிரதிவாதி அவ்வாறே வாதியிடம் பணம் எதுவும் பெறவில்லை என்றாலும், சரியல்ல. வாதி என்உறவினர் என்பதால் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் போலியாக ஒரு புரோ நோட்டை தயார் செய்து பிரதிவாதி பணம் பெற்று கொண்டு கையெழுத்து பெற்றதாக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சிய ம் அளிக்கிறேன் என்றாலும் சரிய ல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/-S.Indulatha,**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM